Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

மாநகராட்சி மன்றம் 18-8-1994 யாழ்ப்பாணம்


நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 01 17-08-94 புதன்கிழமை ஓசை 180

## இரவு ஒன்பது மணிமுதல் ஊரடங்கு கண்டஇடத்தில் சுட உத்தரவு

சிறிலங்காவின் சில மாவட்டங்களில் நேற்றிரவு 9 மணிமுதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா, காலி, மாத்தறை, அம் பாறை, திருகோணமலை, அனுராதபுரம், இரத்தினபுரி மற்றும் கண்டி நகர எல்லைகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் நேற்று இரவு 9 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்கு உத்தரவு வியாழன் காலை 6 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கண்டியில் நடைபெறும் செலபெரகராவை ஒட்டி

(5-ம் பக்கம் பார்க்க)

# கடற்படை கட்டளையிடும் தாய்க் கப்பலும் டோறா படகும் கடற்புலிகளால் மூழ்கடிப்பு



175 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட கட்டளைக் கப்பல்



## காங்கேசன் துறைமுகத்தில் வீரசாதனை

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை, காங்கேசன்துறை துறைமுகத்தினுள் கடற்புலிகளின் விசேட அணியினர் நடத்திய துணிகரத் தாக்குதலில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான கட்டளையிடும் தலைமையகத் தாய்க் கப்பலும், டோறா பீரங்கிப் படகும் மூழ்கடிக் கப்பட்டன.

நேற்று அதிகாலை 12.35 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது. காங்கேசன்துறை துறைமுகத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த கட்டளையிடும் தலைமையகக் கப்பலும், அதற்குப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்த டோறா பீரங்கிப் படகும் தாக்குதலுக்கு இலக்காகி தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கின. இத் தாக்குதலில் கடற்படையினருக்கு பாரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் நம்பப்படுகின்றது.

மிதக்கும் கட்டளை முகாம் என வர்ணிக்கப்படும் இத் தாய்க்கப்பல், வட கடல் பிரதேசத்தில் கடற்படையின் போர் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் என்பதோடு, போர் நடவடிக்கையின்போது சிறிய கப்பல்களுக்கான விநியோகங்களையும் மேற்கொள்வது இதன் முக்கிய செயற்பாடாகும். இதேவேளை இக்கப்பல் நவீன ராடர் சாதனங்களையும் தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டதாகும்.

நேற்று அதிகாலை 12.35 மணியளவில் காங்கேசன்துறை கடற்பரப்பினுள் நுழைந்தகடற்புலிகளின்விசேடதாக்குதல் அணியினர் இவ்விரண்டு கப்பல் மீதும் தாக்குதலை நிகழ்த்தினர்.

இத்தாக்குதலின் போது தாய்க்கப்பல் உடனடியாகவே தீப்பற்றி எரிந்து, கடலில் மூழ்கியது. அத்துடன் டோறா பீரங்கிப் படகும் கடற்புலிகளின் தாக்குதலில் நிர்மூலமாக்கப்பட்டது.

இது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலின் அடித்தளத்தில் வெடிவைத்துதகர்த்தனர்

### கடற்படை உயரதிகாரி தகவல்

## புலிகள் தாக்குதல்கள் அரசால் இருட்டடிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறை

வெளியிடும் தகவல்கள் கடற்படையினருக்கு ஏற்பட்டுள்ள




கட்டளைக் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கும்
டோறா பீரங்கிப் படகு

## கடற்படை உயரதிகாரி தகவல்

(கொழும்பு)
சிறிலங்கா கடற்படையின் நாலாயிரம் தொன் எடையுள்ள கடற்படைக் கட்டளை கப்பலை விடுதலைப் புலிகள் தகர்த்துள்ளதாக வடபகுதி சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் பிரான்ஸ் வானொலிக்கு தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் கடற்படையின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் தலைமைக் கப்பலாக இக்கப்பல் இருந்ததாகவும் விடுதலைப் புலிகளின் வேவு அணி இக்கப்பலின் அடித்தளத்தில் வெடிமருந்துகளை வைத்து தகர்த்துவிட்டதாகவும் வடபகுதி கடற்படையைச் சேர்ந்த உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை துறைமுகத்தினுள் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது

இத் தாக்குதல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் செய்திகளை வெளியிடாததோடு, பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் தகவல்கள் கடற்படையினருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை வெகுவாகக் குறைத்துக் காட்டுவதிலும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன

இதைப்போன்றே கடந்த ஒருவார காலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்களையும் சிறிலங்கா அரசு இருட்டடிப்புச் செய்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது

## துறைமுகப் பகுதியில் இரவு முழுவதும் பதற்றம்

(யாழ்ப்பாணம்)
கடற்புலிகள் காங்கேசன் துறை துறைமுகத்தினுள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்து அங்கு பெரும் பதற்ற நிலை நிலவியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதலைத் தொடர்ந்து இரவு முழுவதும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டவண்ணமிருந்ததாகவும்.
(5-ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்கள் மூழ்கடிப்பு விசாரணைக்கு உத்தரவு

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற கட்டளைக் கப்பலும், டோறா படகும் தகர்க்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது- இத் துறைமுகத்தினுள் புலிகள் எவ்வாறு ஊடுருவினர் என்பது குறித்து அதிகார பூர்வ விசாரணைக்கு சிறிலங்கா படை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்-

## கட்டளைக் கப்பல்

### - சில குறிப்புகள்

சிங்கப்பூர் தயாரிப்பான இக் கட்டளை கண்காணிப்பு கப்பல் 175 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்டது. அரை அங்குல தடிப்பான உருக்கிரும்பினால் ஆனது. கப்பலின் வெறுமையான நிறை 4000 தொன், இதன் சாதாரண வேகம் 8 நொட்ஸ் அதிகூடிய வேகம் 12 நொட்ஸ் எரிபொருள் கொள்வனவு (சேமிப்புத் தாங்கி தவிர) 6000 லீற்றர் பங்கறிங் ராங் 20 - 30 தொன்.

இக் கப்பலில் 75 கடற்படையினர் பணியாற்றுவர். இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கப்பலிலேயே உள்ளன. 1000 படையினரை ஏற்றிச் செல்லக்கூடியது.

இக் கப்பலில் மூன்று ராடர்கள் பொருத்தப்பட்டிருக்கும். ஒன்று 45 மைல் வீச்சை கொண்டது. மற்றவை இரண்டும் 20 மைல் வீச்சையும் கொண்டவை. மேலும் இரண்டு சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். ஒன்று அமெரிக்கத் தயாரிப்பு; இது 10 கடல் மைல்களுக்கு தொடர்பு கொண்டு கதைக்க முடியும். மற்றையது கனடியத் தயாரிப்பு; இலங்கையின் எப்பாகத்திற்கும் தொடர்புகொண்டு கதைக்க முடியும்.

இது 1000 குதிரை வலுவைக் கொண்ட சிங்கப்பூர் ''டியூஸ்'' டீசல் இயந்திரத்தினை கொண்டது.

82 ரக - 14.5 மி மீ இரட்டைக் குழல் துப்பாக்கிகள் நான்கையும், மேலும் ஒரு 25 மி. மீ பீரங்கியையும் கொண்டது.

இக்கப்பல்
O கடல் எல்லையை கண்காணிப்பு செய்து பாதுகாத்தல்
O கடற்படையின் ஏனைய கப்பல்களை வழிநடத்தல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணிக்கு வெற்றிவாய்ப்பு; வெளியான முடிவில் முன்னணி

(கொழும்பு)
**நேற்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி அடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று அதிகாலை வரை வெளியான முடிவுகளிலும், தபால் மூல வாக்களிப்பு முடிவுகளிலும் பொது ஜன ஐக்கிய முன்னணி முன்னணியில் உள்ளது.**

சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தல் தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் நள்ளிரவு வெளிவரத்தொடங்கின. இம்முடிவுகளில் பிரகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆளும்ஐ.தே.கவைவிட முன்னணியில் உள்ளது.

முதலில் வெளிவந்த முடிவுகளிலும் பொ. ஐ முன்னணி கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது. மொனராகலை, பொலநறுவை, வன்னி மாத்தறை, கண்டி என்பனவே முதலில் வெள்வந்த முடிவுகள் ஆகும்.

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## முதலிரு முடிவுகளில் பொ. ஐ. மு. வெற்றி

பாராளுமன்றத் தேர்தலில் வெளிவந்த முதல் இரு தொகுதிகளிலும் முடிவில் பொதுஜனஐக்கிய முன்னணி வெற்றிபெற்றுள்ளது

**மாவட்டம் - மாத்தறை**
**தேர்தல் தொகுதி:**
**மாத்தறை-**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 73 461 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்- | 54,686 |
| பொ ஐ மு- - | 32,529 |
| ஐ-தே-க- - | 18,915 |
| சி-மு-மு- - | 1,264 |

**தேர்தல் தொகுதி:**
**கப்புறுப்பிட்டிய**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 69050 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 52035 |
| பொ ஐ மு | 32318 |
| ஐ தே க | 16069 |
| சி மு மு | 1098 |

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஹைக்கோ, கற்பூரம், மாஜா, வாள்பிளேற், சீயாக்காய், பாக்கு, சீனி விற்பனைக்குண்டு. சி. எம். சுகந்தினி 309, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். (9087)

### சாரதா

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது. (9098)

### துளிர்

தமிழ் நாடு, புதுவையில் பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (9097)

### நாவல்கள்

நல்லூர்உற்சவகால பூபாலசிங்கம் புத்தகசாலையில் செங்கைஆழியானின் நாவல்களை 20 சதவீத விசேஷ கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தக சாலை, நல்லூர் (9105)

### 1995 இல் யார் ஜனாதிபதி?

(மகர ராசி) சந்திரிகாவின் ஜாதகத்திலே கர்க்கடக லக்கினத்திற்கு 10-ம் வீட்டில், வெள்ளி, செவ்வாயுடன் யோகபலமடைகின்றது. தற்போது நடைபெறும் வெள்ளி புத்தி/சனிதெசையில் அமோக வெற்றியுடன் சந்திரிகாவை பிரதமராக்கும். ஐப்பசி வியாழமாற்றம் (11-ம் இடயோகஸ்தானம்) ஜனாதிபதியாக்கும். (சத்யா கட்டுடை) (9112)

### விற்பனைக்குண்டு

NO. 7, அலர் தகரப்பெட்டியுடன் விற்பனைக்குண்டு பிள்ளையார் மில் தாவடி மானிப்பாய் வீதி, தாவடி. (சி/ 10117)

### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இலங்கை வங்கிக்கு முன்பக்கமாக வுள்ள ஒழுங்கையில் ஒன்றே முக்கால் பரப்பு (1¾) காணி வசதியான வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஜோர்ச் பேரின்ப ராஜசிங்கம்

### ஜோதிட விஞ்ஞானம்

கன்னிராசி, அத்தம் நட்சத்திரத்தில் பிறந்த ஸ்ரீமாவோ விஜேதுங்கா இருவருக்கும் (11.11.94)ஜனாதிபதியாகும் யோகங்கள் அஸ்தமிக்கின்றன. ஸ்ரீமாவோவின் மாரக தெசைநோய் உபாதைகளால் எப்பதவிகளிலும் தக்கவைக்கவியலாது. சந்திரிகாவையே ஜனாதிபதியாக்கும். சத்யா, கட்டுடை. (9120)

### பொது அறிவு

பொது அறிவு நூல் வெளிவந்து விட்டது ஆக்கம்:- கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை. (9106)

### விற்பனைக்குண்டு

அலுஸ்ரேசன் நாய் கறுப்பு நிறம் 2½ மாதம் ஆண் /பெண் [குட்டிகள்] விற்பனைக்கு உண்டு தொடர்பு- விஜி,125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [9115]

### வியாழமாற்றம்

விற்பனையாகிறது. எல்லா இராசிகளுக்கும் ஒரே நூலில் பலனறிய - ரூபா பத்து மட்டுமே ஆசிரியர் V. A சிவராசா சோதிடர் வேலணை - 152B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (9119)

### சித்த வைத்திய பட்டதாரிப் பயிற்சி

க. பொ. த. ப. (உயர் தரம்) தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வைத்திய மரபிற் தகுதிபெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இங்கு பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம், 870, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9124)

### அட்லாண்டா தயாராகிறது

1996-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த அமெரிக்காவின் அட்லாண்டா நகரம் தயாராகி வருகிறது. இந் நகரம் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளுக்காக பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் புகழ்பெற்ற சி.என்.என் தொலைக்காட்சி நிலையத் தலைமையகம் அட்லாண்டா நகரில் உள்ளது. கறுப்பர் இனத் தலைவரான மார்டின்

---

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் நடாத்தும்

லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவையொட்டி

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

1994/09/26 லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

### போட்டி விதிமுறைகள்,

**கீழ்ப்பிரிவு**

01. கவிதைகள் பதினைந்து வரிகளுக்குஉட்பட்டதாகவும், கட்டுரைகள் ஐம்பது சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்,
 அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்,
 ஆ. இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் தமிழ் மக்கள் அடைந்த துன்பம் என்பவற்றுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**மத்திய பிரிவு**

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத் தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்,
 அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்,
 ஆ. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காலங்களில் தமிழ் மக்கள் புலி வீரர்களைக் காத்த விதம்.
 இ. லெப். கேணல் திலீபனின் வீரச்சாவின்போது மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பும், இந்திய எதிர்ப்பு உணர்வும் என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**மேற் பிரிவு**

01. கவிதைகள் நூறு சொற்கள் வரையிலும், சிறுகதைகள் கோட்டுத் தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்.
 அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்,
 ஆ. இந்தியா எம் மண்ணுக்குச் செய்த துரோகம்,
 இ. எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகாலத் தொடர்புகள், இன்றைய நிலைமை.
 ஈ. இந்திய இராணுவம் எம் மண்ணுக்கு வந்ததற்கான பின்னணி,
 உ. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காக தலைவர், திரு. வே. பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான நடவடிக்கைகளும், புலிகளின் நுண்ணிய போர்த்திறனும்.
 ஊ. இந்திய இராணுவம் புலிகளிடம் எவ்வாறு தோற்றது என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

கீழ், மேல், மத்திய பிரிவுகளுக்கான பொதுவான விதிமுறைகள்

01. படைப்புக்களைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
02. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.
03. போட்டியாளர் தனது (அ) பெயர்
 (ஆ) பாடசாலையின் பெயர்
 (இ) கல்வி கற்கும் ஆண்டு
 (ஈ) வகுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பம்
 என்பவற்றை தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்
 (உ) கடித உறையின் இடது பக்கத்தில் தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவுப் போட்டி என குறிப்பிடல் வேண்டும்.
04. படைப்புக்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டு. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு செயலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. போட்டி முடிவுத் திகதி 1994,09-10 முடிவுத் திகதிக்கு பிந்தி வரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
07. மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை, கட்டுரை போட்டியில் 1-ம்,2-ம்,3-ம் இடத்தில் தெரிவாகும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரின் படைப்பாற்றலை வெளிக் கொண்டு வரும்முகமாக நடாத்தப்படும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமாறும் அனைத்துத் தமிழீழ மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்

**விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு**

---

## நினைவு கூருகின்றோம்...

### 17-08-1994...

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - தள்ளாடிச் சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் காணாமல் போன நாட்டுப்பற்றாளரான,

**குஞ்சு** (கனகரத்தினம் சதானந்தன் - புத்துவெட்டுவான்-கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு பளை - வேம்பொடுகேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் சிவா** (கணபதிப்பிள்ளை செல்லத்துரை - எழுதுமட்டுவாள் - பளை)

**அன்ரன்** (செந்தில்நாயகம் மகேந்திரா - கோப்பாய் வடக்கு - யாழ்)

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மூர்த்தி** (விநாயகமூர்த்தி இராஜேஸ்வரன் - 3ஆம் வட்டாரம், முள்ளியவளை, மணலாறு)

1992 ஆம் ஆண்டு மட்டு - வாழைச்சேனை, புதுக்குடியிருப்பில் சிறிலங்கா காவல் படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளுடனானசமரில் வீரச்சாவெய்திய.

**2ஆம் லெப்.ரதீஸ்/நதீஸ்** (திரக்குட்டி சுதாகரன் - கோளாவில் வடக்கு, அக்கரைப்பற்று - அம்பாறை)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான

**அழகையா ஜீவானந்தம்** (மாங்கேணி - மட்டு)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை-இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10122)

---

மாபெரும்

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் 21-08 94 ஞாயிற்றுக்கிழமை சிறுப்பிட்டி அண்ணா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் சவாரிப்போட்டியில் தமிழீழத்தின் முன்னணி காளைகள் பங்குபற்றுகின்றன என்பதை அறியத் தருகின்றோம்

\- நிர்வாகம்

ஜோர்ச் பேரின்ப ராஜசிங்கம் ''மனோ வாசா'', மூத்த தப்பி ஒழுங்கை, மானிப்பாய்.

(9113)

இனத் தலைவரான மார்டின் லூதர் கிங்கும் இங்கு தான் பிறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, மகளிர் பிரிவு. (9122)

கின்றோம்

- நிர்வாகம்

(9127)


பருத்தித்துறை மக்களிற்கோர் நற்செய்தி!

# சேரன் பல்பொருள் வாணிபம்

மற்றுமொரு கிளை!

## பருத்தித்துறை நகரில்

19 - 08 - 1994 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு தனது சேவையை ஆரம்பிக்கின்றது.

பருத்தித்துறை மக்களின் நெடு நாள் விருப்பை நிறைவுசெய்ய

## சேரன் வருகின்றான்....

தரமான பொருட்களை
மலிவான விலையில்
பெற்றிட நாடுங்கள்

23 . 08 . 1994-ல் முதலாவது ஆண்டினை பூர்த்தி செய்யும்

## சேரன் பல்பொருள் வாணிபம்
## நெல்லியடி

அன்பர்கள், ஆதரவாளர்களிற்கு
தனது நன்றியை தெரிவித்து
தொடர்ந்தும் உங்களிற்கு சேவை செய்ய
உங்கள் வாழ்த்தினை வேண்டி நிற்கின்றது

# ★ சேரன் பல்பொருள் வாணிபம் ★

குறிப்பு: 19-8-94-ல் தென்மராட்சியிலும் எமது நடமாடும் சேவை ஆரம்பமாகின்றது என்பதனை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பிரதான வீதி - பருத்தித்துறை
(மரக்கறி சந்தைக்கு அருகாமையில்)

(சி-9121)

பிரதான வீதி நெல்லியடி.

# 35 வருட காலமாக 'கிரிக்கெட்' களத்தில் பிரகாசித்து வரும் கனகையா சூரியகுமார்

யாழ்ப்பாண விளையாட்டுக் களங்களில் மிகப் பிரபல்யம் பெற்று விளங்குவது கிரிக்கெட் ஆட்டமாகும். இதற்கென தனியானதொரு ரசிகர் கூட்டம் உண்டு. இவ்வாட்டத்தின் பெருமைக்கு பல காரணங்கள் இருந்தாலும் அவற்றுடன் சேர்த்துப் பார்க்க வேண்டியஇன்னொரு காரணமும் உண்டு. அதுதான் மூத்த சில உறுப்பினர்கள் மிக நீண்டகாலமாக தம் திறன் குறையாதுகளத்தில் நிற்பது. இவர்களுக்காகவே ஒரு ரசிகர் கூட்டம் பின்பற்றுவோர் குழாமும் உள்ளது என்றாலும் மிகையில்லை. இவ்வகையினருள் குறிப்பிடத்தக்கதொருவர்தான் கனகையா சூரியகுமார் இவரை கிரிக்கெட்வட்டாரங்கள் சூரி என்றறியும். இந்தப் பெயருக்கு அறிமுகம் அவசியமில்லை ஈழநாதம் விளையாட்டரங்கு சார்பாக இவரைக் கண்டு உரையாடி இவரின் அனுபவங்களை ரசிகர்கள், வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினோம். மிகவும் விநயத்துடன் சூரி சம்மதித்தார். இவருடையஆரம்பகாலக் கிரிக்கெட் பிரவேசம் பற்றிக் கேட்டபோது 1960 ல் தான் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் பரியோவான் கல்லூரிக்கு ஆட ஆரம்பித்தமை பற்றியும் 62, 63-ல் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் ஆடிய பின்னர் 64-67 வரை 19 வயதிற்குட்பட்ட அணியின் அங்கத்தவராக இருந்து 67-ல் அணித் தலைவராக இருந்தமை பற்றியும் குறிப்பிட்டார்.

★உங்கள் பாடசாலை கிரிக்கெட் வாழ்க்கை பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?

நான் 15 வயதில் இருந்தே ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாகவும், ஆரம்ப வேகப்பந்து வீச்சாளனாகவுமே இருந்து வந்துள்ளேன் இப்படியான ஒரு வேளையில் நான் முதலில் நினைக்க வேண்டியது என் ஆசான் மகாலிங்கம் மாஸ்ரரைத்தான். 64ல் இருந்து அவரின் கீழ் பயின்ற நான் நிறையவே விடயங்களைக் கற்றுக் கொண்டேன். என் திறமைகளுக்கெல்லாம் காரணம் அவரே. இன்று வரை சிறப்பாக விளையாடும் போது அவரையே நினைத்துக் கொள்வேன். எனது கல்லூரி அணிக்குத் தலைமை தாங்கி 67-ல்யாழ் மாவட்ட பாடசாலை அணியின் தலைவனாகவும் பின்னர் ஜெய்சிம்மா, அப்பாஸ் அலிபேக் போன்ற டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் அடங்கிய ஹைதராபாத் புளூஸ் அணி இங்கு வந்த போது இலங்கைப் பாடசாலைகள் அணியின் ஒரு வீரனாகவும் லண்டன் பாடசாலைகள் அணியுடன் விளையாடிய அணியின் ஒரு வீரனாகவும் இருந்துள்ளேன் இலங்கைப் பாடசாலைகள் அணியில் ஒரு சகலதுறை வீரன் என்ற வகையிலேயே அங்கம் வகித்தேன். அதோடு தடகள விளையாட்டுக்களிலும் எனக்கு ஆர்வம் இருந்தது. இங்கும் மீண்டும் மகாலிங்கம் மாஸ்டர்தான் நினைவுக்கு வருவார். அகில இலங்கை ரீதியில 66-ல் நடைபெற்ற Junior National School தடகளப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய கழகத்தின் ஊடாகச் சென்று கெந்திமிதித்துப்பாய்தலில் முதலாம் இடமும் தடி ஊன்றிப்பாய்தலில் மூன்றாம் இடமும் பெற்றேன். Public schools விளையாட்டுப் போட்டிகளில் 65,66 அகில இலங்கை ரீதியில் தடி ஊன்றிபாய்தலில் 3-ம் இடம் பெற்றுக்கொண்டேன்

★உங்கள் பாடசாலை கிரிக்கெட் வாழ்வின் பின் Tamil Union கழகத்துக்காக ஆடினீர்கள் அல்லவா?

ஆமாம் 67 முதல் 10 வருடங்கள் தொடர்ச்சியாக ஆடினேன். இலங்கை பாடசாலை அணியில் விளையாடியபோது இனம்கண்ட டமில் யூனியன் நிர்வாகிகள் என்னைத் தம் கழகத்துடன் சேர்ந்து ஆடும்படி கேட்டுக்கொண்டார்கள். 76/77 பருவத்தில் Tamil Union கழகத்தின் தலைவராகவும் இருந்தேன்.

தமிழ் யூனியன் அணியில் விளையாடிய போது தான் களத்தில் சந்தித்த இலங்கையின் பிரபல்யமான வீரர்கள் பற்றிக் குறிப்பிட்டார். மைக்கல் திசேரா, டாக்டர் H I. K பெனான்டோ, அனுரா தென்னகோன், துலீப் மென்டிஸ், பந்துல வர்னபுர போன்றோரைக் குறிப்பிடும் இவர் இலங்கை பாடசாலை அணியிலேயே டோனி ஒபாத்தவுடன் ஒன்றாக விளையாடியதையும் நினைவு கூர்கிறார். 79-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வந்த துலீப் மென்டிஸ் தலைமையிலான மகாராஜா நிறுவனக் குழுவில் இலங்கை அணிவீரர்களே அநேகர் சிதாத்வெட்டமுனி, தயாசா பந்து, ரனில் அபய நாயக்க, றசல் காமர், றஸ்லண்ட் பேக், றொகான் ஜயசேகர, லன்டரா பெர்னான்டோ, கேமந்த தேவபிரிய சாந்தி குமார் போன்றோரைக் கொண்ட அணி அது. இவர்களுடனான ஆட்டத்தில் 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதோடு, சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், ஆட்டநாயகனாகவும் அப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டேன்.

★ கொழும்பில் உங்கள் கழக ஆட்டக்காலத்தின் பின் எவ்வகையில் கிரிக்கெட் ஆட்டத்துடன் உங்கள் தொடர்புகள் தொடர்ந்தும் அமைந்தன.

சில வருட இடைவெளியின் பின் 81-ல் யாழ்ப்பாணத்தில் எனது கல்லூரியான பரி.யோவான் கல்லூரியின் 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் பயிற்றுநராக மீண்டும் கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன். 84-ல் சென்றலைட்ஸ் அணியின் ஒரு அங்கத்தவனாக இருந்தேன். 86-ல் தான் ஜொனியன்ஸ்விளையாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. தொடங்கும் போதே அதன் தலைவனாகஇருந்தேன் மத்தியஸ்தர்சங்கவெள்ளிவிழா மட்டுப்படுத்தப் பட்ட கிரிக்கெட்சுற்றுப் போட்டியில்பங்கு கொண்டு அவ்வருடமே சாம்பியன் பட்டத்தையும் வென்றேன். அன்றிலிருந்து இன்று வரை ஜொனியன் ஸுடனே

(4ஆம் பக்கம் பார்க்க)

## துடுப்பாட்டம்

1965 பரியோவான் கல்லூரிக்காக 614 ஓட்டங்கள்
1966 பரியோவான் கல்லூரி 344 ,, ,,
1967 ,, (தலைவர்) 599 (சராசரி 85)
1965-ல் மத்திய கல்லூரிக்கெதிராக 81 ஓட்டங்களும் 7 இலக்குகளையும்பெற்றார். கொழும்பு றோயல் கல்லூரிக்கு எதிராக 67-42 ஓட்டங்களும் 7 இலக்குகளும் பெற்றார்.
1967-ல் 3 சதங்கள் 181 - 154 - 106 இவர் பெற்ற181 இன்று வரை கல்லூரியின் அதியுயர் ஓட்ட எண்ணிக்கையாக விளங்குகின்றது.

## டெய்லி மிறர் பத்திரிகை

1967-ல் பிரபல்யமான பாடசாலைகிரிக்கெட் வீரர் போட்டியில்.
வெளிமாவட்ட பிரபல்யமான வீரன் 2-ம் இடம்
கனகையா சூரியகுமார்
அகில இலங்கை பிரபல்யமான வீரன் 4-ம் இடம்
கனகையா சூரியகுமார்



சந்திப்பு நிர்மலன்

## விளையாட்டு அரங்கு

### ஒருநாள் சர்வதேச போட்டித் தொடர்

# இரண்டிற்கு ஒன்று என்ற ரீதியில் பாக். அணி சிறிலங்காவை வென்றது

பாகிஸ்தான் சிறிலங்கா அணிகளுக்கிடையிலான மூன்று ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களும் முடிவடைந்து 2-1 என்றவாறு பாகிஸ்தான் இத் தொடரில் வெற்றி கண்டுள்ளது. முதலா [illegible]

ஓவர்களில் 169 ஓட்டங்கள் என்று குறைக்கப்பட்டது. இவ்வோட்டஎண்ணிக்கையை 30 2 ஓவர்களில் ஒரு இலக்கு இழப்பிற்கு பாகிஸ்தான் இலகுவாகப் பெற்றுக் கொண்டது. ஆட்ட நாயகன் சயீட் [illegible]

பிற்கு 47. 2 ஓவர்களில் பெற்றுக் கொண்டனர். ஆரம்பச் சோடியாகிய சனத் ஜயசூரிய, சஞ்சீவ றணதுங்க இருவரும் 104 ஓட்டங்கள் வரை கொண்டு செல்ல, பின்னர் அரவிந்த டி சில்வா [illegible]

சிறிலங்கா அணி பதிலளித்து ஆடுகையில்49ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 218 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சனத்ஜயசூரிய மீண்டும் 50 ஓட்டங் [illegible]

# மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட்போட்டி; ஜொனியன்ஸ் அணி சம்பியனானது

அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் இறுதியாட்டம் நிறைவடைந்துள்ளது. இப் [illegible]

சிறந்ததொரு கிரிக்கெட் வீரர்.

மகேந்திரராசா 30, சுதேசன் 23, சிவசுதன் 36 என்று தம் பங்கிற்கு ஓட்டங்களைப் பெற் [illegible]

மாகவும் இருந்தன. பின்னர் தயாளன் நிலைப்படுத்தி ஆட முனைந்த போதும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அதன் பின்னர் ஜொனியன்ஸ்

வெற்றி கண்டுள்ளது. முதலாவது மூன்றாவது ஆட்டங்களை பாகிஸ்தான் வெற்றி கொள்ள, இரண்டாவது ஆட்டம் சிறிலங்காவிற்கு வெற்றியாக அமைந்தது.

முதலாவது ஆட்டம் கேத்தாராம (பிரேமதாசா) அரங்கில் நடைபெற்ற பகல் இரவு ஆட்டமாகும். இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த சிறிலங்கா அணி 6 இலக்குகள் இழப்பிற்கு 200ஓட்டங்களைத் தமது 50 ஓவர்களில் பெற்றுக்கொண்டனர். இவர்களின் ஆட்டத்தில் குறிப்பிடத்தக்கது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சனத் ஜயசூரிய, சஞ்சீவ ரணதுங்கா இருவரின் ஆட்டமுமாகும். சனத் ஜயசூரிய 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இருவரும் ஆரம்பச் சோடியாக 86 ஓட்டங்களைச் சேகரித்தனர். இருந்தும் கூட இவ்வோட்ட எண்ணிக்கையைப் பெற 26 ஓவர்கள் இவர்களுக்குத் தேவைப்பட்டது. இந்நிலையில் மத்திய வரிசை ஆட்டக்காரர்கள் அழுத்தமானதொரு நிலையில் ஆடவேண்டி ஏற்பட்டது. இதன் காரணமாகவோ என்னவோ மத்திய வரிசையில் மூன்று ரண் அவுட்கள் ஏற்பட்டன. அர்ஜுன றணதுங்கா, ஹசான் திலகரத்ன, அரவிந்த டிசில்வா, ஆகியோரின் ரண் அவுட்களுக்குக் காரணமாக அமைந்தது மட்டுமன்றி தானும் ரண் அவுட் முறையிலேயே ஆட்டமிழந்தார். எனவே தாம் எதிர்பார்த்தளவு ரண் குவிக்க இயலாது 200 என்ற நிலையை மட்டும் அடைய முடிந்தது. பாகிஸ்தான் தரப்பில் சலீம்மாலிக் இரண்டு இலக்குகளையும், அக்ரம்றசா ஒரு இலக்கையும் பெற்றனர்.

தொடர்ந்து பாகிஸ்தான் அணி ஆட ஆரம்பித்த போது இடையில் மழை குழப்பியதால் அவர்களின் இலக்கு 42 டது. ஆட்ட நாயகன் சயீட் அன்வர், இன்சமாம் உல் ஹக் இருவரும் ஆட்டமிழக்காது 70,53 என்றவாறு ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டனர். இழக்கப்பட்ட ஒரு இலக்கு அமீர் சொகெய்ல் உடையது. இதனை முரளிதரன் வீழ்த்தினார். இவ்வகையில் பாகிஸ்தான் 9 இலக்குகளால் சிறிலங்காவைத் தோற்கடித்தது.

இரண்டாவது ஆட்டம் சிறிலங்காவிற்கு வெற்றியாக அமைந்தது. இவ்வாட்டத்தில் சிறிலங்கா திறமையாக விளையாடியதைக் குறிப்பிட வேண்டும்.

இவ்வாட்டத்திற்கு 20 வயது நிரம்பிய இடதுகை வேகப் பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் சேர்த்துக் கொள்ளப்பட்டார். முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 இலக்கு இழப்பிற்கு 180 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. சலீம் மாலிக் 61 ஓட்டங்களையும் பசீட் அலி 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இந்த ஆட்டத்தில் இன்சமாம் உல் ஹக் 14 ஓட்டங்களை பெற ஒரு மணி நேரம் எடுத்தார். ஒரு கட்டத்தில் 43 ஓவரில் 143 ஓட்டங்கள் மட்டும் பெற்றிருந்த பாகிஸ்தான் இறுதி 7 ஓவர்களில் 37 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதற்குக் காரணம் சுழல் பந்து வீச்சாளர் ருவான் கல்பகே. இவர் ஆரம்பத்திலேயே சலீம் மாலிக், பசீட் அலி இருவரின் இலக்கைச் சரித்தவர். பின்னால் தனது இறுதி ஓவர் இறுதி இரண்டு பந்துகளில் றசீட் லத்தீப், வாக்கர் யூனுஸ் இருவரையும் சாய்த்து விட்டார்.

சிறிலங்கா அணி வெற்றி பெறத் தேவையான 181 ஓட்டங்களை 3 இலக்கு இழப் பின்னர் அரவிந்த டிசில்வா 22 ஓட்டங்கள் பெற அணித் தலைவரும், அசங்க குருசிங்காவும் தலா 10 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். 7 இலக்கு வெற்றி சிறிலங்காவிற்குக் கிடைத்தது. இவ்வாட்டத்தில் சனத் ஜயசூரிய 54 ஓட்டங்களும், சஞ்சீவ றணதுங்க 70 ஓட்டங்களும் பெற்றனர். சஞ்சீவ றணதுங்க ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முதலிரண்டு ஆட்டங்களையும் விட மூன்றாவது ஆட்டமே மிகப் பரபரப்பாக அமைந்த ஆட்டமாகும். சிறிலங்கா தோற்றாலும் கூடத் தம் திறமையை இறுதி வரை காட்டத் தவறவில்லை. இதில் சிறப்பாக சிறிலங்கா சார்பான சமிந்த வாஸ், ருவான் கல்பகே இருவரையும் குறிப்பிடுதல் வேண்டும். பாகிஸ்தான் அணி இவ்வாட்டத்தை சாதாரணமாகவே ஆரம்பித்தது. அவர்கள் 3 இலக்குகளை இழந்த போது ஓட்ட எண்ணிக்கை 58 மட்டுமே. இந்நிலையில் இருந்து 4 வது இலக்குச் சோடியாக சேர்ந்தசலீம் மாலிக்கும்,பசீட் அலியும் ஓட்ட எண்ணிக்கையை 154 வரை கொண்டு சென்றார்கள். ஒருகட்டத்தில் 44வது ஓவரில் 161/5 என்ற நிலையில் இருந்த பாகிஸ்தான், இறுதி 5 ஓவர்களில் 71 ஓட்டங்களைக் குவித்தது. இதற்குக் காரணம் அணித் தலைவர் சலீம்மாலிக் ஆவார் இவர் ஆட்டமிழக்காது 93 ஓட்டங்கள் பெற்றவர் முரளிதரனின் ஓவர் ஒன்றில் 4 ஆறுகள் உட்பட 26 ஓட்டங்கள் பெற்றவர். பசீட்அலி 50 ஓட்டங்களைப் பெற வசீம் அக்ரம் 23 ஓட்டங்கள் பெற்றார். இவ்வாறு 50 ஓவர்களில் 7/237 என்று பலமான நிலையில் பாகிஸ்தான் தன் நிலையைப் பேணிக்கொண்டது.

சூரிய மீண்டும் 50 ஓட்டங்களைப் பெற மறுபுறம் இலக்குகள் தொடர்ந்து சரிந்து கொண்டிருந்தன. முன்னணி ஆட்டக்காரர்கள் யாரும் சோபிக்க இயலவில்லை றொசான் மகாநாம பெற்ற 32 ஓட்டங்களைக் குறிப்பிட இயலுமாயினும் சிறிலங்கா தமது 8வது இலக்கை இழக்கும்போது ஓட்ட எண்ணிக்கை 133 மட்டுமே. இந்நிலையில் பாகிஸ்தானின் வெற்றி கேள்விக்குரியதாக இருக்கவில்லை. இருந்தும் 8-ம் இலக்க துடுப்பாட்ட வீரர் ருவான் கல்பகேயுடன் 10-ம் இலக்க சமிந்த வாஸ் சோடி சேர்ந்த போது இந்த இரண்டு புதிய இளைஞர்கள் - குறிப்பாக பந்துவீச்சுக்காக அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தமகு பெரும் ஆபத்தானவர்களாக இருப்பார்கள் எனப் பாகிஸ்தான் எண்ணியிருக்காது. இவர்கள் இருவரும் சேர்ந்து 133ல் இருந்து209வரை ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துச் சென்றனர். 209ல் சமிந்த வாஸ் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ருவான் கல்பகேயுடன் முரளிதரன் சோடிசேர்ந்தார். 49-வதுஓவரில் 218ல் முரளிதரன் ஆட்டமிழந்ததுடன் சிறிலங்கா தன் இலக்குகள் அனைத்தையும் இழந்தது. ருவான் கல்பகே ஆட்டமிழக்காது 44 ஓட்டங்கள் பெற்றிருந்தார். போட்டிமுடிவு எவ்வாறு அமைந்தபோதும் ருவான் கல்பகே, சமிந்தவாஸ் இருவரும் அன்றைய தினம் சிறிலங்கா ரசிகர்கள் அனைவரினதும் பெரும் பாராட்டைப் பெற்றிருப்பார்கள். இவர்கள் இருவரும் சிறிலங்கா அணியின் கௌரவத்தை அன்றைய தினம் காப்பாற்றினார்கள் என்றாலும் மிகையில்லை.

நிறைவடைந்துள்ளது. இப்போட்டியை நடாத்தியவர்கள் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தினராவர். இப் போட்டி கால் இறுதி ஆட்டம் வரை 30 ஓவர்களைக் கொண்டதாகவும், அரையிறுதியாட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாகவும் இறுதியாட்டம் 50 ஓவர்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. இவ்விறுதிப் போட்டியை ஜொனியன்ஸ் அணியினரும் ஜொலிஸ்ரார் அணியினரும் சந்தித்தனர். ஜொனியன்ஸ் அணியினர் 18 ஓட்டங்களால் வென்று 93/94க்கான வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

ஆரம்பத்தில் பூவா, தலையா பார்ப்பதில் வெற்றி கண்ட ஜொலிஸ்ரார் அணியினர் ஜொனியன்ஸ் அணியினரைத் துடுப்பெடுத்தடும்படி கேட்டுக் கொண்டனர். ஜொனியன்ஸ் எழுச்சியாக ஆட்டத்தை ஆரம்பிக்கவில்லையாயினும், பிரசாந்தனை அடிப்படையாகக் கொண்டு அமைந்த சோடி சேர்ந்த ஆட்டங்கள் அவர்களை நல்லதொரு நிலைக்கு உயர்த்தியது எனலாம். 2 விக்கெட் சோடியாக மகேந்திரராசாவும், சுதேசனும் 47 ரண்களைச் சேர்த்து சிறந்த அத்திவாரத்தை ஏற்படுத்த அதன் பின்னர் 5-வது விக்கெட் சோடியாக பிரசாந்தனும், சிவசுதனும் மிகச் சிறப்பாக 74 ரண்களைக் குவிக்க, தொடர்ந்தும் பிரசாந்தனின் தலைமையிலேயே சூரியுடன் 6-வது விக்கெட் சோடியாக இன்னும் 42 ரண்களைச் சேர்த்து 50 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து ஜொனியன்ஸ் 196 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இவ்வெண்ணிக்கையில் சந்தர்ப்பம் ஏதும் கொடுக்காது பிரசாந்தன் பெற்ற 59 ஓட்டங்கள் சிறப்பானவை. பிரசாந்தன் மிகச்

பங்கிற்கு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். அண்மைக் காலத்தில் சிவசுதன் மத்திய வரிசையில் நிலைத்து நின்று ஆடும் தன்மையை சிறப்பாகவே வெளிப்படுத்தி வருகின்றார். பந்துவீச்சில் கபிலன் 5 ஓவர்களில் 20 ரண்கள் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற, பிரதீஸ் குமாரும், சிறிகுமாரும் தலா 10 ஓவர்களில் தலா 2 விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து ஆட ஆரம்பித்த ஜொலிஸ்ரார் அணியினர் முதல் சோடியாக ஆர். வரதன் சிவராசா சோடி சேர்ந்து 47 ஓட்டங்கள்வரை சேகரித்தனர். ஆனால் துடுப்பாட்டத்தில் சோபித்த பிரசாந்தன் மீண்டும் பந்து வீச்சில் தன்னை நிரூபிக்க முனைந்தார். இதனால் சீரான இடைவெளியில் ஜொலிஸ்ரார் தம் இலக்குகளை இழக்க ஆரம்பித்தனர். முதல் விழுந்த ஐந்து இலக்குகளில் ஒரு ரண் அவுட் தவிர மற்றைய நான்கும் பிரசாந்தினால் கைப்பற்றப்பட்டவை.

இதேவேளை பிரசாந்தனுக்குச் சவாலாக ஆர். வரதன் மறுமுனையில் நிலைத்து ஓட்டங்களை அழகாகச் சேகரிக்கத் தொடங்கினார். ஆர். வரதன் சிறப்பாக ஆடி சதத்தை அண்மித்த போது வெற்றி வாய்ப்பும் அவர்களுக்குச் சாதகமாக இருந்தது ஆனால் தனது 99-வது ஓட்டத்தில் நான்கு பந்துகளைத் தடுத்தாடி ஏனோ திடீரென்று ஐந்தாவது பந்தை எதிர்காற்றில் ஆறாக மாற்ற முனைந்து அகிலனின் கைகளில் பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். ஆர் வரதனின் அவுட் ஜொலிஸ்ராரின்வெற்றி வாய்ப்பையும் அநேகமாகத் தட்டிப்பறித்தது எனலாம். இவர் 7வதாக ஆட்டமிழக்கும் போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 150 ஆகவும் இன்னும் 11 ஓவர்கள் மீத

அதன் பின்னர் ஜொனியன்ஸ் அணிக்கு வெற்றி நிச்சயமாயிற்று.

பிரசாந்தன் தொடர்ச்சியாகப் போட்ட 10 ஓவர்களும் ஒரு திட்டத்தின் அடிப்படையிலேயே போடப்பட்டன. இவரே ஜொலிஸ்ரார் வீழ்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்தார் பின்னணியில் நரேஸ், சூரி இருவரும் இவ்விரண்டு இலக்குகளைச் சாய்த்தார்கள் 46. 3 ஓவர்களில் ஜொலிஸ்ரார் 178 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஆட்டம்நடைபெற்ற மைதானம் விளையாட்டு வீரர்களுக்குச் சாதகமானதல்ல. மிகவும் மெதுவான மைதானமாகும். இக்களத்தில் ஜொனியன்ஸ் பெற்ற 196 மிகவும் பெரிய ஓட்ட எண்ணிக்கையென்றே கொள்ள வேண்டும் இத்தகைய சாதகமற்ற நிலையிலேயேஜொலிஸ்ரார் அணியினரும் சிறப்பாக வெற்றியைநோக்கிச் சென்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. மேலும் இம் மைதானம் ரசிகர்களையும் கவர்ந்திழுக்கும் பாங்கில் இல்லை என்பதும் உண்மை இவ்வாறு களை கட்டாத ஒரு மைதானமாக இது இருந்தாலும்கூட இதில் ஒரு சிறப்புண்டு. யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் கழகத்திற்கென்று சொந்தமாக ஒரு மைதானம் இருக்கின்றதென்றால் அது இது ஒன்றுதான் அநேகமாக இன்று 20 கழகங்கள் வரையில் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்வது வழக்கம். எனவே இம் மைதானம் வளம் பெற்று வசதிகள் பெற்று வளர்ந்து வருவதற்கு நீண்டகாலம் செல்லாது என்று நம்பலாம். அந்தவகையில் வசதிகள் குறைந்த ஒரு ஆரம்பம்; நிறைவான ஒரு மைதானத்தின் வளர்ச்சிக்கு வழிகோலப் போகிறது என்றவகையில் அரியாலைமத்திய விளையாட்டுக்கழகத்தினர் பெரும் பாராட்டுக்குரியவர்கள்

# 35 வருட

எனது கிரிக்கெட் வாழ்வு போகின்றது. ஆரம்பத்தில் சேவியர் மாஸ்டருக்கும் உதவியாக இருந்த நான் 1989ல் இருந்து கல்லூரியின் 3 அணிகளுக்கும் பயிற்றுநராக இருக்கின்றேன். தற்போது இப்பணியில் ஜெகநாதன் எனக்கு உதவியாக இருந்து நிறையவே உதவிசெய்கின்றார். இன்று பலராலும் அறியப்பட்ட காண்டீபன் எனது கிரிக்கெட் மாணவன். இவர் என் ஆசான் மகாலிங்கம் மாஸ்டரின் மகன் இந்தத் தொடர்பு ஒருவகையில் என் ஆசானுக்குச் செய்யும் நன்றிக்கடனாக இருப்பதாக நான் எண்ணுவதுண்டு.

★ யாழ்ப்பாணக் கிரிக்கெட் தரம் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

இங்கு சுற்றுப் போட்டிகள் நிறையவே நடக்கின்றன. இதனால் போட்டி நிலையும் அதிகம். இதுவே ஆட்டம் முன்னேறிவருவதைக் காட்டுகிறது. இன்னொரு வகையில் நோக்கி தரம் பற்றிக் கூறும் போது வெளி மாவட்ட அணிகளுடன் ஆடும் சந்தர்ப்பங்கள் இருந்தால் தான் தரம் பற்றிய ஒப்பீடு சரியாக அமையும். ஆனால் எமக்குள் வீச்சு கூடிக் கொண்டு வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இன்னொரு வகையில் எனது பாடசாலைக் காலத் தரத்தோடு ஒப்பிடும் போது எம் காலம் தரம் கூடியதாகத் தான் இருந்தது. இன்று கால மாற்றத்துக் கேற்ப, பாடசாலை மட்ட ஆட்ட நேரம் காணாது என்பது என் கருத்து இன்னும் ஆட்டவேளையை அதிகரிக்க இயலுமாயின் தரம் இன்னும் கூடுதலாக அமையும். அதேவேளை தீர்க்கமான முடிவை நோக்கியும் ஆட்டங்கள் செல்ல இயலும்.

★ யாழ்ப்பாணத்தில் நீங்கள் இனங்காணக் கூடிய சிறந்த கிரிக்கெட் வீரர்கள்......?

நிறையவே இருக்கிறார்கள் மிக்க வீச்சுடைய ஒரு சிலரைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். சென்றலைட்ஸ் சுரேஸ் விக்கெட்காப்பாளர் என்ற வகையில் சகலதுறை ஆட்டக்காரர் என்ற வகையில் ஜொனியன்ஸ் பிரசாந்தன், ஜொலிஸ்ரார் எஸ் வரதன் (பெரிய வரதன்) தற்போது பல்கலைக்கழக ஆட்டக்காரர்.

இவர்கள் மூவருக்கும் சரியான வாய்ப்பும் வசதியும் கிடைக்கும் பட்சத்தில் உயர் தர ஆட்டத்துக்கு இலகுவாகவே தெரிவு செய்யப்படக் கூடியவர்கள்.

★ யாழ்நகருக்கு அப்பால் உள்ள கழகங்கள் தற்போது முனைப்பாக கிரிக்கெட்டில் முன்னேறுகிறார்கள் அல்லவா?

நிச்சயமாக நாங்கள் வரவேற்க வேண்டிய விடயம் இது. இதுவும் கிரிக்கெட் வளர்ந்து வர ஒரு வழியாகும்.

★ யாழ்ப்பாணத்தில் நிறைய கிரிக்கெட் ஆடப்படுகின்றது. ஆனால் எல்லோரையும் ஒழுங்கமைக்கும் ஒரு CRICKET BOARD என்ற மாதிரியான அமைப்பிருந்தால் நல்லதல்லவா?

ஆம் இதுமிகவும்அவசியம். ஏனெனில் கழக, பாடசாலை மட்டங்களில் அனைவரும் ஒரு சில பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். மத்தியஅமைப்பு ஒன்று இருந்தால் பொதுவான சட்டதிட்டங்கள் இருக்கும் எல்லோரும் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பர். ஆட்டங்களுக்கும் சிறந்தநொரு அங்கீகாரம் இருக்கும். இன்றுள்ள பாடசாலை சட்ட திட்டங்களில் கூட சில மாற்றங்களைக் கொண்டு வரத்தான் வேண்டும். சட்ட திட்டங்களைக் கொண்டு வரும் போது சர்வதேச சட்டங்களின் அடிப்படையுடன் எமது சூழலுக்கு ஏற்பவும் சிலவற்றை வரையறுத்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக அவற்றைக்கௌரவித்து நடக்க வேண்டும்.

★ மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டங்கள் வீரர்களின் உண்மையான திறனையும், ஆற்றலையும் வளர்க்காதல்லவா?

இது உண்மை. ஆனால் நிறைந்த இனிங்ஸ் போட்டிகளுக்கு எமது சூழல் சாதகமாக இல்லை. இனிங்ஸ் ஆட்டங்கள் தான் வீரரின் திறமையை வெளிப்படுத்தும். ஆனால் இவற்றை ஒழுங்கு செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. வெகுசீக்கிரம் ஜொனியன்ஸ் - சென்றலைட்ஸ் 3 நாள் ஆட்டம் ஒன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்கின்றோம். சந்தர்ப்பங்கள் வரும் போது இன்னும் ஏற்பாடுகள் செய்யக்கூடியதாக இருக்கும்.

★ நீங்கள் ஏறத்தாழ 35 வருடங்களாக விளையாட்டு மைதானங்களில் காலத்தைக் கழிக்கிறீர்கள். அம்மாவில் இருந்து மனைவிவரை ஆதரவு எப்படி?

எனது தந்தை 1930 களில் ஒரு உதைபந்தாட்ட வீரர் நிறைந்த விளையாட்டுப் பிரியர். அம்மாவும் நிறைய ஆதரவு தந்தவர். இன்றும் நானோ எனதுமகன் செந்தூரனோ கிரிக்கெட் ஆடும் போது அம்மா அண்மையில் உள்ள மைதானத்துக்குக் கட்டாயம் வருவார். இப்போது அவருக்கு வயது 74 எனக்கு இரண்டு பிள்ளைகள் மகன் செந்தூரன் மகள் பிரியதர்சினி நான் இன்று வரை மைதானங்களிலேயே காலம் கழிப்பதற்கு மனைவியின் ஆதரவு நிறையவே இருப்பதுதான் காரணம் என்பதைச் சொல்லவா வேண்டும் ஆரம்பத்தில் இருந்தே சகோதரர்களும் பலவகையில் ஒத்தாசை தந்தார்கள். இப்படியொரு பின்னணி இல்லாவிட்டால் இவ்வளவு காலம் தொடர்ந்து விளையாட முடியாது.

இன்னொன்று நான் பயிற்றுநராக இருப்பதால் துடுப்பு, பந்து என்பவற்றுடன் காலம் செல்கிறது. எனது விருப்பமும் மிக அதிகம் எனவே இன்றும் எனக்கு வயது 47 என்று நான் நினைப்பதில்லை

★ உங்கள் நீண்டகால கிரிக்கெட் அனுபவத்தின் மறக்கமுடியாத சம்பவங்கள்?

நிறையவே உள்ளன. ஒரு சிலவற்றை எண்ணிப்பார்க்கிறேன். 66ல் கண்டி சென். சில்வெஸ்ரர் கல்லூரிக்கு எதிராக நாங்கள் கண்டியில் ஆடியபோது வெற்றி பெறக் கூடிய ஆட்டத்தை ஒரு ரண்ணால் தோல்வி கண்டோம். 1965ல் சென். ஜோன்ஸ் சென்ட்ரல் ஆட்டத்தில் ஆரம்ப சோடியாக நானும் ஜெகநாயகமும் 101 ஓட்டங்கள் வரை சோடி சேர்ந்து ஆடியதையும் மறக்கஇயலாது. 86ல் மத்தியஸ்தர் வெள்ளி விழா ஆட்டத்தில் மகிந்தவும் நானும் சோடியாகப் பெற்ற 105 ஓட்டங்களையும் மறக்க முடியாது இவ்வாட்டத்தில் நான் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டேன்

★ கிரிக்கெட் தொடர்பாக உங்கள் எதிர்காலத் திட்டங்கள் ஏதும் உண்டா?

பரவலாக 15 வயதிற்குட்பட்டவர்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொரு துறையிலும் சிறப்பார்ந்தவர்கள் மூலம் சிறார்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் ஒன்றுஉள்ளது. இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம். ஆனால் இந்தக் காலகட்டம் அதற்கு வாய்ப்பாக இல்லை நிதிபோன்ற பல்வேறு பிரச்சினைகள்

தற்காலிகமான முறையில் ஒரு பரீட்சார்த்தமாக பரியோவான் கல்லூரி ஆண்டு 5 மாணவர்களில் A B எனப் பிரித்து 10 வயதிற்குட்பட்ட மென்பந்துகிரிக்கெட் 20ஓவர் கிரிக்கெட் போட்டியொன்றை நடாத்தினோம் ஒரு கழகஇறுதியாட்டம் போன்ற தொரு பாணியில் வெற்றிக்கிண்ணம் போன்றன கொடுத்து நடாத்தினோம், எல்லோருக்கும் பெரும் உற்சாகமாக இருந்தது எனது மகன் செந்தூரன் சிறந்த துடுப்பாட்ட வீரன், சகலதுறை வீரன் என்ற விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

★ எமது இளம் கிரிக்கெட் [illegible] தல் வேண்டும்: தான் முன்னேற தன் அணி முன்னேற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

★ உங்களுக்குப்பிடித்த சர்வதேச கிரிக்கெட் வீரர்? இம்ரான் கான். அவரது சகலதுறை விளையாட்டுத் திறமை அவரது நேர்த்தியான தலைமைத்துவம் அவரது காலத்தில் பாகிஸ்தான் அணியின் திறமை வெளிப்பாடு என்பன குறிப்பிடத்தக்கன மேலும் அணிஎன்ற வகையில் அவுஸ்திரேலிய அணியையே கூடுதலாகப் பிடிக்கும் றிச்சி பெனோ, நீல் கார்வி, நோர்மன் ஒநீல், என்றவாறு கூறிக் கொண்டே செல்லலாம் அற்புதமான கிரிக்கெட் வீரர்கள். அவர்களை ஆதர்சமாகக் கொண்டு அவுஸ்திரேலிய அணியின் ரசிகனாக மாறி விட்டேன்.

சூரியுடன் நிறையவே கிரிக்கெட் பற்றிப் பேச முடிந்தது. சர்வதேச உள்ளூர் விளையாட்டுக்கள் தொடர்பாக நீண்டநேரம் உரையாடினோம். தன் துறையில் திறமையும். அதே வேளை தெளிந்த அறிவும் கொண்டவராக இவர் திகழ்வது சிறப்பு நிறையவே அவருடைய கிரிக்கெட் வாழ்வு தொடர்பான பதிவுகளை அவர் பேணிவைத்துள்ளார். இங்கு எம்மால் ஒரு சிலவற்றையே வாசகர்களுக்குத் தர முடிந்தது. எமது உரையாடலின் போது நண்பர் கண்ணனும் உடனிருந்து உதவினார். சூரிக்கும், கண்ணனுக்கும் வாசகர்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து விடைபெற்றோம்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை.
அன்ரன்
(மகேந்திரா செந்தில் நாயகம்)
பிறப்பு: 1967.08.22
வீரச்சாவு: 1989 08 17


எமது மண்ணில் நற் பெயர் பெற்றது

ரோயல் ரோஸ் ரால்கம் பவுடர்

★ நறுமணம் மிக்கது
★ சுகாதாரம் மிக்கது
★ புத்துணர்ச்சியானது
★ அனைவராலும் விரும்பத்தக்கது
★ விலை மலிவானது

தீபா ரோஸ் ரால்கம் பவுடர்

அழகிய கொள்கலங்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

சந்தைப்படுத்துவோர்:-

ரோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வட மேற்கு,
ஆனைக்கோட்டை.

(சி-10126)

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

முழுநேரப் பயிற்சிநெறிகள் [illegible]

முழுநேரப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கவுள்ளன.

★ நீங்கள்ஒருதொழிற்றுறைப் பட்டதாரியாய் உருவெடுக்க மிகச் சுளுவான மார்க்கத்தை நாங்கள் சமைக்கின்றோம்... இங்கே தொடங்கும் பயிற்சி நெறி உங்களை திறந்த பல்கலைக்கழகத்திற்கு - பாட விதான விலக்குகளுடன் - இட்டுச் செல்லும்!

மாணவர்களே! தொடர்புகள் அறுந்து போயுள்ள அகாலத்தில் இது ஓர் அற்புத வாய்ப்பு;
வசப்படுத்திக் கொள்ளுங்கள்!! ★

## TECHNICIAN DIPLOMA COURSES (ENGLISH MEDIUM)

(இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையில் மட்டுமே நடாத்தப்படும்)

1. Civil Engineering & Quantity Surveying
2. Electronics & Electrical Engineering
3. Mechanical Engineering.

Duration :- 3 Years
Educational qualification:- Six subjects in G. C. E. (O/L) including Maths - C; Science - C; English - S

★ We guide you through the simplest path to emerge as a "Graduate in Technology!" Our courses lead you to the Open University of Shri Lanka with exemptions!

At a state of total breakdown in communication, it's a fine opportunity!...

It's your's. If you are looking for it! ★

## DIPLOMA COURSES (ENGLISHMEDIUM)

இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையிலும், நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையிலும் நடாத்தப்படும்.

1. Civil Draughtsmanship - 1 year
2. Computer programming & Data processing - 1 Year
   (Basic, Cobol, d- Base III +& Pascal) - Practicals on IB. I - PCAT & MAT 385 industrial controller
3. Advanced Diploma in Computing - 1 Year
   (syllabus includes British Computer Society & Australian Computer Society)
   Educational qualification:- Six passes in G C.E. (O/L) with Maths - C & English - S and for advanced Computing, two passes in G. C. E. (A/L).

இதர வசதிகள்:- 1. நூலகம், 2. விடுதி, (இரு பாலாருக்கும். தனித்தனியே)
3. விளையாட்டுத்துறை. (இதில் ஆர்வமுள்ளோர்க்கு விசேட பயிற்சி மற்றும் சலுகைகள் வழங்கப்படும் )

விண்ணப்பப் படிவம்:- ரூபா. 30.00 செலுத்தி, தொ. நு. கல்லூரியின் வட்டுக்கோட்டைக் காரியாலயத்திலும் யாழ்ப்பாணக் கல்லூரி - வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையத்திலும் (யாழ். போது மருத்துவமனை முன்பாக) பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 22 - 08 - 1994

(சி-10022)

## TECHNICIAN CERTIFICATE COURSES (ENGLISH MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடாத்தப்படும்)

1. Air - conditioning & Refrigeration - 1½ Year
2. Radio & T. V. Servicing - 1 Year
3. Automobile Technology - 1 Year

Educational qualification ;- G. C. E. (O/L) with Maths & Science - S

## CRAFT COURSES (TAMIL MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடாத்தப்படும்)

1. Machine shop Practice - 1 Year
   (இயந்திரப் பட்டறைப் பயிற்சி)
2. Electrical Wiring & Installation Practice - 1 Year
   (மின்னிணைப்பும் நிர்மாணமும்)
3. Welding Practice - 1 Year
   (உலோக ஒட்டுவேலைப் பயிற்சி)

கல்வித் தகைமை:- க. பொ. த (சா / த) வரை படித்திருத்தல் வேண்டும்.

க. பொ. த, (உ / த) - 94 ஓகஸ்ட் - பரீட்சார்த்திகளுக்கு இப்பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத் தக்க வகையில் ஆங்கில மொழிமூலம் வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். இதற்கு ஏற்ப பயிற்சிக் காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகள் செப்ரெம்பரில் ஆரம்பிக்கவுள்ளன.

★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

**DIRECTOR**

---

★ எமது இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?
இப்பொழுது இளம் வீரர்கள் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறைவாகவே காணப்படுகின்றது திடமான பயிற்சிகள் அவசியம் என்பதை இளம் வீரர்கள் நன்கு உணர வேண்டும். இன்று பயிற்சிக்கு வந்தாலும் கூட துடுப்பாட்டம் பந்து வீச்சுப் போன்றவற்றில் காட்டும் ஆர்வம் பந்துத்தடுப்பில் காட்டப்படுவதில்லை. பந்துத்தடுப்பில் இவர்கள் கூடிய கவனம் செலுத்து

---

வீரச்சாவு:1989 08 17
நீ மறைந்து ஆண்டுகள் ஐந்தானது
உன் நினைவுகள் எம்மை விட்டு அகலாதது
நீ கண்ட கனவுகள் நனவாகும் வேளை
உன் மரணத்தின் அர்த்தம் எமக்குப்புரிகின்றது
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
-குடும்பத்தினர்.
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(சி-10125)

---

யாழ் பல்கலைக்கழகம்

## அரும் பொருளகத்திற்கு வரைபடங்கள் வழங்கல்

மேற்குறித்த அரும் பொருளகத்தில் காட்சிக்கு வைப்பதற்காக, பின்வரும் விபரங்கள் அடங்கிய வரைபடங்கள் செய்து வழங்க, தகுதிவாய்ந்தநிறுவனங்கள்/தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) இந்திய வரைபடம் - 5 அளவு - 5' × 5'
(2) இலங்கை வரைபடம் - 4 அளவு - 5' × 4'

அமைப்பு - துணியில் வர்ணம் தீட்டப்பெற்று இடங்கள் குறிக்கப்படல் வேண்டும். படங்கள் சிறப்பான சட்டப்படலில் (Frame) பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

★ மேலதிக விபரங்களுக்கு தலைவர், வரலாற்றுத் துறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 29- 8- 94க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நிதியாளர், யாழ் / பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர் (சி-10124)

## சிந்தனைக்கு..

ஒரு சிலர் நன்மைக்காக
வேறு சிலர் நாமடைய வேண்டும்
என்பதுதான் அரசியல் நெறி
- ஜோனார்தன் ஸ்விப்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 17-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# மக்களின் பெயரில் வன்முறை

சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பைத் தொடர்ந்து பெரிய அளவில் வன்முறைகள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இவ் எதிர்பார்க்கைக்கு ஏற்ப வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுமா? அல்லது வெறும் பூச்சாண்டியா என்பதை நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் போது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளே பெருமளவு ஊர்ஜிதப்படுத்தக் கூடும்.

ஆனால் இது எவ்வாறு இருப்பினும் வன்முறை குறித்து மக்கள் பெருமளவில் அச்சம் கொண்டிருப்பது மட்டும் மறுப்பதற்கில்லை. அண்மையில் தென்னிலங்கையில் இருந்து வரும் தகவல்கள் அங்கு பெரும்பாலான பகுதிகளில் ஒருமயான அமைதியே நிகழ்வதாகவும், எப்பொழுதும் பூகம்பம் வெடிக்கலாம் என மக்கள் அஞ்சிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றன.

இதனை ஊர்ஜிதப்படுத்துமாப் போல் பல சம்பவங்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. வடக்கில் பாதுகாப்பான சூழ்நிலை, இல்லை என வெளியேறி கொழும்பில் வசித்து வந்த பலர் தற்பொழுது மீண்டும் வடக்கே வந்துள்ளனர்.

இதேசமயம் வசதியடைந்த பலர்- தமிழர், சிங்களவர்- சிங்கப்பூர், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இதேசமயம் விசா வழங்கலில் இந்திய தூதுவராலயம் கடைப்பிடிக்கும் கட்டுப்பாட்டால் பலர் இந்தியா செல்ல முடியாமல் தவிப்பவர்களும் உண்டு.

அத்தோடு வீடுகளில் பாதுகாப்பு இல்லை எனக் கருதும் வசதிபடைத்த பலர் கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டல்களில் சென்று தங்கியுள்ளனர். வெளிநாட்டவர்களுக்கு, அவர்களின் முதலீடுகளுக்கும் வழங்கப்படும் பாதுகாப்பின் கீழ் அவர்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் முனைந்துள்ளனர்.

இதேசமயம் அரசாங்கம் பெரியளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதாகவும் அறி


# கட்டுமுறிவு முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த 7 போராளிகள் விபரம்

கட்டுமுறிவு சிறிலங்கா இராணுவ முகாம் கடந்த 11-ம் திகதி அன்று புலிகளால் தகர்க்கப்பட்டபோது விழுப்புண் அடைந்த ஏழு போராளிகள் நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். வீரச்சாவடைந்த

★ 2-ம் லெப், அருணந்தி/ உதயகுமார் (செல்லையா ஆத்மராசா, மட்டக்களப்பு)
★ 2-ம் லெப். பழனி/ரகுமான் (சுந்தரம் சுந்தரராஜ், அம்பாறை)
★ வீரவேங்கை பரமகரன்/ சிறி (தங்கராஜா சிவானந்தராஜா, மட்டக்களப்பு)
★ வீரவேங்கை முருகன் ஆறுமுகம் கமலநாதன், மட்டக்களப்பு.
★ வீரவேங்கை இந்துதரன்/ இந்துதாஸ் (சிவானந்தராஜா தில்லைநாதன் மட்டக்களப்பு)
★ வீரவேங்கை சுகுணன் (சிவலிங்கம் நடராசா, மட்டக்களப்பு)
★ வீரவேங்கை மலர்வண்ணன் (கந்தப்பன் கோபாலன், மட்டக்களப்பு)

ஆகிய ஏழு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.


# விழுப்புண் அடைந்த மேலும் எழுவர் வீரச்சாவு



2-ம் லெப். அருணந்தி (உதயகுமார்)



2-ம் லெப். பழனி (ரகுமான்)



வீரவேங்கை பரமகரன் (சிறி)



வீரவேங்கை முருகன்





# ஐ. தே. கவிற்கு வாக்களிக்குமாறு பிபிலை போலிசார் மிரட்டல்

மொனராகலை பிபிலைப் பகுதியில் பொலிசார் மக்களை ஐ. தே. கவிற்கே வாக்களிக்கும்படி மிரட்டியதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது பொலிசார் இவ்வாறு மிரட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் அப்பகுதிக்கு தேர்தலை கண்காணிக்கச்சென்ற சர்வதேச கண்காணிப்பு குழு உறுப்பினர் பங்களாதேஷை சேர்ந்த அப்துலாகான் இச் சம்பவத்தை நேரில் கண்டதாக தெரிவிக்கப்படுகிறது

இவர் இச்சம்பவத்தை பின்னர் பொலிஸ் பிராந்திய அத்தியட்சகருக்கு அறிவித்தார் இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் இராணுவரோந்து அதிகரிக்கப்பட்டதுடன் பொலிசாரை தமது நிலையங்களில் தங்கியிருக்கும் படியும் பொலிஸ் நிலையங்களைவிட்டு வெளியேறுவோர் மீது இராணுவம் நடவடிக்கை எடுக்கும் எனவும் பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்தார் சில பொலிஸ் நிலையங்களை சுற்றி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

# கொழும்பில் தமிழர் மத்தியில் இனம் தெரியாத பதற்றம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் வாக்குப் பதிவுகளில் கொழும்பிலுள்ள தமிழர்கள் பெரும்பான்மையோர் ஈடுபட்டிருந்தபோதும் அவர்கள் மத்தியில் இனம்புரியாத பயமும் பதற்றமும் காணப்பட்டன. இவ்வாறு பி. பி. சியின் விசேட செய்தியாளர் ஆனந்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் பி. பி. சியின் சிங்கள சேவையான சந்தேசியவின் முகவர் எல்மோ பெர்னாண்டோவுடன் சிங்கள மக்கள் எந்தவித பயமும், பதற்றமும் இன்றி தெளிவாகப் பேசியபோதும் தமிழர்கள் அவ்விதம் காணப்படவில்லை வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பில் கலந்து கொண்ட தமிழர்கள் கூட தமது பெயர் விபரங்களை மட்டுமன்றி எந்தக் கட்சிக்கு வாக்களித்தீர்கள் ஏன் அக்கட்சியை ஆதரித்தீர்கள்? எவர் ஆட்சிக்கு வருவதை விரும்புகிறீர்கள்? என்பது போன்ற பொதுவான கேள்விகளுக்கு பதிலளிக்கவும் பெரும் தயக்கம் காட்டினார்கள்.

அத்துடன் ஏன் பயப்படுகிறீர்கள் எனச் சில வாக்காளர்களை கேட்டபோது பயப்படாமல் இங்கு இருக்க முடியாது என்றே தெரிவிக்கின்றனர் எனவும் கூறினர்.

## உதைபந்தாட்டம்

யாழ். றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 90 நிமிட நேர ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யங்கென்றிஸ் எதிர் அராலி அண்ணா மோதவுள்ளது.

## சைக்கிள் முற்பணம் மீளளிக்க முடிவு

துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முற்பணம் செலுத்திய அனைவருக்கும் அவர்களது முற்பணத்தினை மீளளிப்பது என யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணம் வங்கியினால் வழங்கப்பட்ட வட்டியுடன் மீளளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அச்சங்கம் மேலும் தெரிவிக்கிறது.

## கொடுப்பனவு

கோப்பாய் கோட்டப் பாடசாலை ஆண்டு 2இல் சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய ஆசிரியர்

தேர்தல்

படும் பாதுகாப்பின் கீழ் அவர்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் முனைந்துள்ளனர்.

இதேசமயம் அரசாங்கம் பெரியளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அறிவித்து வருகின்றது. முப்படையினரும், பொலிசாரும் உசார்படுத்தப்பட்டுள்ளதோடு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்துள்ளதாக வானொலி மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் அறிவிப்புக்கள் வெளியாகின்றன.

இதற்கும் மேலாக சமயத்தலைவர்கள், குருமார்கள் ஆகியோரைக் கொண்டு வன்முறையில் இறங்க வேண்டாம் எனவும் கோரிக்கையையும் விடுத்துள்ளது, இதற்கு அடுத்த கட்டமாக அரசியற்கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி அமைதி பேணுமாறு கோரிக்கை விடுத்துள்ளதோடு எதிர்த்தரப்பினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதாவது வன்முறைக்கு அஞ்சி ஒருபுறம் மக்கள் ஒதுங்கிக் கொள்ளவும்/ தப்பி ஓடவும் முயற்சிக்கும் வேளையில், மறுபுறம் தேர்தல் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என அரசாங்கமும், அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும் மக்களிடம் கோரிக்கை விடுத்துக் கொண்டுள்ளனர். இவ்வாறானால் தேர்தல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் யார் என்பதே முக்கியமான கேள்வியாகும்.

தேர்தல் என்பது மக்கள் தமது 'ஜனநாயக ரீதியான உரிமைகளை' நிலைநாட்டுவதற்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும், உண்மையில் அரசியல்வாதிகள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு போட்டியிடும் ஒரு களம் என்பதே நடைமுறையாகவுள்ளது. இதில் நடக்கும் அனைத்து மோசடிகளுக்கும், ஊழல்களுக்கும், வன்முறைகளுக்கும் அரசியல்வாதிகளே முற்று முழுதாகப் பொறுப்பாகும் என்பதே யதார்த்த நிலையாகும்.

ஆனால் வழக்கம் போலவே தமது அதிகாரப் போட்டிகளுக்கு மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் அவர்கள் பழியை மற்றவர்கள் மீது போடும் ஒரு வழமையான கூச்சலே வன்முறையில் ஈடுபடாதீர்கள் என்பதாகும். ஆனால் இவர்களே வன்முறையின் பின்னணியில் உள்ளனர். தேர்தல் காலத்தில் இவர்களின் கைக்கூலிகளாகவும், இவர்களின் எடுபிடிகளாகவும் உள்ளவர்களுக்கு இவர்கள் வார்க்கும் 'பாலே' தேர்தல் வன்முறைகள் யாவற்றிற்கும் காரணமாகிறது. ஆனால் இதற்கான பழியை இவர்களே அப்பாவிப் பொதுமக்கள் மீது சுமத்தியும் விடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றால் அரசியல்வாதிகளே வன்முறைகளை நிறுத்த வேண்டும். இதில் ஆளும் கட்சி என்ன? எதிர்க்கட்சி என்ன? எல்லாம் ஒன்று தான், மக்களின் பெயரால் வன்முறை புரிவது இவர்களே.

க்கு யங்கென்றிஸ் எதிர் அராலி அண்ணா மோதவுள்ளது?

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 08. 17**
**புதன் இரவு**

08. 01 - குயிலோசை - ''எதிர்காலத் தமிழீழசிற்பிகள்''
08. 20 - ஏர்முனை- ''நீர்ப்பாவனை'' தனி நடிப்பு
08. 30 - செய்திகள்
08. 40 - நாடகம் '' வாழ் விழந்தவள்''.

**1994. 08. 18**
**வியாழன் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - விடுதலைகீதங்கள்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

### துறைமுகப்

பகல் போன்ற வெளிச்சம் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் காணப்பட்டதாகவும் தெரிய வருகின்றது

அத்தோடு, படையினர் நடமாட்டம் அதிகரித்திருந்ததாகவும், பல உயர்அதிகாரிகள் துறைமுகப்பகுதிக்கு வந்து சென்றதாகவும் அறியமுடிகின்றது

### கடற்படை

தகவல் வெளியிடுகையில், வட பகுதியில் கடற்படையினரின் பிராந்திய தலைமையகமாக செயற்பட்ட தாய்க்கப்பல் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாக தெரிவித்தது.

துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தல்

னர் ஜனாதிபதி மாளிகைக்கு செல்லும் சகல பாதைகளிலும் போக்குவரத்து முற்றாக தடைசெய்யப்பட்டிருந்தது எனவும் குறிப்பிட்டார்

வென்னப்புவ தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் அமைச்சர் ஒருவர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து வாக்காளரை மிரட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடித்துறை அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவே வென்னப்புவ தேர்தல் வாக்களிப்பு நிலைய வாசலில் வைத்து தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுட்டதாகவும் இதனால் பதற்றமடைந்த வாக்காளர் நாலாபுறமும் சிதறி ஓடியதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் வென்னப்புவ தொகுதி வேட்பாளருமான மிஸ்றோய் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் துப்பாக்கி வேட்டுக்கு அஞ்சி ஓடிய வாக்காளர் தொடர்ந்து வாக்களிக்க விரும்பின் ஐ. தே. கவுக்கே வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் வாக்காளரை மிரட்டியதாக தெரிவித்தார்.

காலி, நுவரெலியா, மாத்தளை நகரங்களில் நேற்று தேர்தல் வன்முறைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது வாகனங்கள் சில தீக்கிரையாக்கப்பட்டதாகவும் சிலர் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கோப்பாய் கோட்டப் பாடசாலை ஆண்டு 2இல் சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான பயிற்சி கொடுப்பனவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும்

### இரவு ஒன்பது

அங்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. இங்கு நேற்று இரவு 11 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு உத்தரவு இன்று மாலை 3 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் இரவு 11 மணிக்கு அமுல் படுத்தப்பட்டு நாளை காலை 6 மணிக்கு நீக்கப்படவுள்ளது.

ஊரடங்கு சட்டத்தை மீறுவோர் பொலிசார் அல்லது ஆயுதப்படையினரால் கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் 5 ஆண்டுகள் வரையிலான கடூழிய சிறைத்தண்டனைக்கு அவர்கள் ஆளாவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.


சட்ட விரோதமாகக் கூடுவதை அல்லது வன்செயல்களில் ஈடுபடுவதை தடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும். சட்டவிரோதமாக கூடுவதன் மூலம் உயிராபத்துக்கள் ஏற்படுவதையும் சொத்துக்களுக்கு அழிவு ஏற்படுவதையும் தடுப்பதற்காக ஊரடங்கு சட்டத்தை மீறுவோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு பொலிசாருக்கும் ஆயுதப்படையினருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

### கட்டளை

0 கடற்படையின் ஏனைய கப்பல்களுக்கு நீர், டீசல், மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்
0 எதிரிகளை சிறிய கப்பல்களுக்கு காட்டிக்கொடுத்து சண்டைகளுக்கு வழிநடத்தல்
0 யுத்த காலத்தில் இராணுவத்தினரை ஏற்றிச் செல்லல் (1000 இராணுவத்தினரை ஏற்றிச்செல்ல முடியும்)
0 ரோந்தில் ஈடுபடுதல் (இது ஒருமாத காலம்வரை குறிப்பிட்ட இடத்தில் தரித்து நின்று கண்காணிப்புச் செய்யக்கூடியது.)



வீரவேங்கை
இந்துதரன்
(இந்துதாஸ்)



வீரவேங்கை
சுகுணன்



வீரவேங்கை
மலர்வண்ணன்

11-8-1994 விடுதலைப் புலிகளால் மட்டக்களப்பு மாவட்டம் கட்டுமுறிவு இராணுவ முகாம் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்திருந்த ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த இப்போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கட்டளையிடும் கப்பலை பாதுகாக்கும் "டோறா"

படகின் அண்ணளவான நீளம் -41அடி, படகின் அண்ணளவான அகலம் -15 அடி, படகின் ஆகக்கூடிய வேகம் - மணிக்கு 66.67 கிலோமீற்றர் படகின் சாதாரண வேகம் - மணிக்கு 61.29 கிலோமீற்றர் படகு ஒரு செக்கனில் நகரும் தூரம் -17, 025 மீற்றர், படகின் வேகம் (கடல் மைல்களில்) - 35 - 40 கடல் மைல், படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுத தளபாடங்கள் ஒற்றைக் குழல் '' ஒவர் லிக்கன் '' 20மி. மீ பீரங்கி-02, 50கலிபர் விமான எதிர்ப்பு பீரங்கி-02, இயந்திர துப்பாக்கிகள் படகில் பொருத்தப்பட்ட ஏனைய சாதனங்கள் :

'டெக்கா' றேடர் -01, வி.எச் எவ் தொலைத் தொடர்பு சாதனம் - 01, ஜெனரேற்றர் - 02, என்ஜின் - 02, 8' நீளமான சிறிய படகு -01 (சில வேளைகளில் இராது), திசையறிகருவிகள் - 02, 'சி, கியூ ஆர்' நங்கூரம் - 01

# அச்சுவேலிப் பகுதியில் அகோரச் ஷெல்வீச்சு; ஒரேகுடும்பத்தில் மூவர் உட்பட ஆறுபேர்பலி

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாம் இராணுவத்தினர் அச்சுவேலி, பத்தமேனி பகுதிமக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறுபேர் பலியானார்கள். மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று காலை6மணிமுதல் தொடர்ச்சியான 50க்குமேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன.

இவ் எறிகணைக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான தேசிங்கம் செல்லமணி (வயது 45), தேசிங்கம் சிறிஸ்கந்தராசா (வயது 16), தேசிங்கம் சிவாசிறி (வயது 26), எஸ். ராகினி (வயது 9) சீ. சிவக்கொழுந்து (55) வல்லை வெளியில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையில் வல்லிபுரம் பரராசசிங்கம் (வயது 59) கதிரிப்பாய் ஆகியோர் பலியாகினார்கள்.

மேலும் இச் சம்பவங்களின் போது சி. செல்லையா (வயது 48) செல்லையா சந்திரா (வயது 42) ஆகியோர் படுகாயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### செபமாலை அரியநாயகம்

பன்னாலை வீதி, தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்ட செபமாலை அரியநாயகம் (ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சீமேந்து கூட்டுத்தாபனம் முகாரி) அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் தெல்லிப்பளை செபமாலை சேது ஜெயசீலி அவர்களின் அன்பு மகனும், திருமதி முத்தாச்சி அரியநாயகத்தின் அன்புக் கணவரும், சிறீபுஸ்பராஜா (பிரான்ஸ்) ஸ்ரீஸ்கந்தலோஜினி, ஸ்ரீஸ்காந்தரேவதி (யேர்மனி), ஸ்ரீமங்களராஜா, ஸ்ரீவனஜா, ஸ்ரீபவளராஜா, ஸ்ரீதரன், ஸ்ரீநவராஜா, ஸ்ரீபிரபு ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பரமசிவம், திரு. சிவலிங்கம், திருமதி நந்தினி ஸ்ரீநவராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற டேவிற், காலம்சென்ற பங்கிராஸ், திருமதி ராஜேஸ்வரி, போல், திரு. இப்பொலிற், திரு. சொலமன், சிங்கநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரரும், திருமதி பாக்கியம் டேவிற், திருமதி அரியமலர்-பங்கிராஸ், திருமதி சிவரூபராணி-இப்பொலிற், திரு J.Cபோல். திருமதி மரியம்மா சொலமன், திருமதி மரி-சிங்கநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

அரியநாயகம் ஸ்ரீநவராஜா (மகன்)

85/2 வைத்தியசாலை வீதி,

யாழ்ப்பாணம்.

(9123)

## மரண அறிவித்தல்

### கனகராஜா பிறேம்சந்திரன்

பருத்தித்துறையைச் சேர்ந்த கனகராஜா பிறேம்சந்திரன் 15. 08. 1994 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் வல்வை, காலஞ்சென்ற கனகராஜா (விதானையார்), சந்திராதேவி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சொக்கலிங்கம், காலஞ்சென்ற செல்வரத்தினம் தம்பதிகளின் பேரனும் சிவதாஸ் (ஆசிரியர்), (1987-88 விஞ்ஞானபீட மாணவன்

# காதைப்பிளந்த ஓசையின் பின் ஐயோ, ஐயோ என்ற கூக்குரல் கேட்டது

(நமது நிருபர்)

''காதைப்பிளக்கும் வெடி ஓசையை தொடர்ந்து ஐயோ! ஐயோ! என்று பின் வீட்டிலிருந்து அவலக்குரல் கேட்டது உடனே அந்த வீட்டிற்கு ஓடிச் சென்றேன் ஒரே புழுதி மயமாகவும் வெடிமருந்து மணமும் சேர்ந்து என்னை திணறடித்தன. ஒருவாறு வளவினுள் சென்றபோது அந்த வீட்டில் இருந்தவர்கள் உடல் சிதறி எங்கும் இரத்தமும் சதையுமாக சிதறிக் கிடந்தனர் ஒருவர்மட்டும் இரத்த வெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்தார்'' இவ்வாறு நேற்றுக் காலை அச்சுவேலிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு பலியானவர்களையும் படுகாயமடைந்தவர்களையும் முதலில் சென்று பார்த்து மருத்துவமனைக்கு எடுத்து சென்றவரான சின்னத்தம்பி பசுவலிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: நான் தேநீர் அருந்திவிட்டு வேலைக்கு செல்லும் அவசரத்தில் உடுப்பு மாற்றிக்கொண்டிருந்தபோது பலத்த வெடியோசை கேட்டது. அதைத் தொடர்ந்து கற்களும் மண்ணும் வீட்டின் மேல் வீழ்ந்தன அடுத்து பின் வீட்டில் இருந்துவந்த அவலக்குரலைக் கேட்டு அங்கு செல்ல முயன்றபோது எனது மனைவி பயத்தினால் அங்கு போக வேண்டாம் எனத் தடுத்த போதும், பின்வீட்டுப்பக்கமா ஓடினேன்.

எங்கும் ஒரே புகைமண்டலமாக இருந்ததுடன் வெடிமருந்து மணமும் என்னை மூச்சு திணறவைத்தன. இருந்தும் உள்ளே சென்றபோது றூபி சிறிஸ்கந்தராசா இரத்தவெள்ளத்தில் துடித்துக்கொண்டிருந்தான். அவருக்கு கொஞ்சம் இறந்து கிடந்தனர்: எங்கும் ஒரே தசை சிதறலும் இரத்த வெள்ளமுமாக கிடந்தது.

அப்போது இறந்தவர்களை விட்டுவிட்டு உயிருக்காக போராடிக் கொண்டிருந்த றூபியை நெருங்கி அவனை தூக்கியபோது அத்தான் அத்தான் என முனகினார். அதேவேளை அவ்வளவில் இருந்த அடுத்த குடிசையில் இருந்தும் காயப்பட்டவர்களின் அவலக்குரல் கேட்டது. றூபியை ஒருவானில் ஏற்றிவிட்டு மற்றக் குடிசைக்கு போனபோது செல்லரும் அவரது மனைவியும் படுகாயமடைந்த நிலையில் கிடந்தனர். மோசமான காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் சிறுமி ஒருவரும் கிடந்தார். எல்லோரையும் வேறு சிலரின் உதவியுடன் வானில் ஏற்றி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும் போது வான் நல்லூர் கோவிலை அண்மித்தவேளை றூபியின் உயிரும் பிரிந்தது என்றார். (சி)

# சந்நிதி ஆலய சுற்றாடலில் ஷெல் வீழ்ந்து வெடித்தது

(வடமராட்சி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய சுற்றாடல் குடியிருப்புகளை நோக்கி பலாலியில் இருந்து ஐந்து ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. இச் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு குடும்பப் பெண்மணி காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நடைபெற்றது. மேலும் மூன்று வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகள் பல இறந்தன.

ஆட்லறி ஷெல்லுக்கு இலக்காகி தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த சபாரட்ணம் பத்மாவதி (35) என்பவரே காயமடைந்தார்.

இதேவேளை வல்வெட்டித்துறை குடியிருப்புகள்மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து ஐந்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

இப்பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 3-00 மணியளவில் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் வெளியிடங்களில் விழுந்து வெடித்ததனால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (யோ)

# ஷெல் வீச்சுகளை நிறுத்த அரச அதிபர் கோரிக்கை

பலாலி இராணுவ முகாமிலிருந்து கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் எறிகணைத் தாக்குதலை நிறுத்தும்படி யாழ். அரசாங்க அதிபர் அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள் மூலம் அறிவித்துள்ளார்.

அச் செய்தியில் பலாலி முகாமிலிருந்து பொதுமக்கள் நெருக்கமாக வாழும் அச்சுவேலிப்பகுதி நோக்கி கடந்த சிலநாட்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் எறிகணைத் தாக்குதல்களினால் பலர்

# வெளிவந்த தொகுதி முடிவுகள் சில

**மாவட்டம் மாத்துறை**
**தேர்தல் தொகுதி**
**வெலிகம**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 77,479 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 57,880 |
| நிராகரிக்கப்பட்டவை | 2325 |
| பொ-ஐ மு- | 34 760 |
| ஐ-தே-க. | 19,013 |
| சி-சி-மு- | 1600 |

**தேர்தல் தொகுதி:**
**அக்குரஸ்ஸ**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | - 74562 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 59311 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2674 |
| பொ. ஐ, மு | 32, 837 |
| ஐ தே க | 21, 999 |
| சி மு மு | 1,554 |

**தேர்தல்தொகுதி**
**தெவிநுவர**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்:- | 66927 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 50, 776 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1,841 |
| பொ ஐ மு | 28,191 |
| ஐ தே க | 19,335 |
| பி எ பெ மு | 1304 |
| ம எ பெ | 105 |

**தேர்தல்தொகுதி:**
**ஹக்மன**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்: | 70,889 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்: | 55,579 |
| நிராகரிக்கப்பட்டவை: | 3165 |
| பொ. ஐ மு | 30,834 |
| ஐ தே க | 20,608 |
| ஸ்ரீ ல பி பெ | 991 |
| ம எ பொ | 181 |

**மாவட்டம்-குருநாகல்**
**தேர்தல் தொகுதி**
**கிரியாலை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | - 67182 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 53, 484 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2817 |
| ஐ தே க | 26,181 |
| பொ ஐ மு | 23,984 |
| சி மு மு | 311 |

**மாவட்டம் - கண்டி**
**தேர்தல் தொகுதி-**
**தெல்தெனிய**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | - 32992 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 27,830 |
| நிராகரிக்கப்பட்டவை | 1,766 |
| ஐ-தே-க- | 13 408 |
| பொ-ஐ-மு- | 12,457 |
| சி-மு-மு- | 99 |

**தேர்தல் தொகுதி:**
**செங்கடகல**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்: | 55,740 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்: | 43,724 |

**மாவட்டம்- அநுராதபுரம்**
**தேர்தல் தொகுதி**
**ஹொரவப்பொத்தானை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | - 51,975 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | - 42,650 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1552 |
| பொ ஐ மு | 22,825 |
| ஐ தே க | 17,966 |
| சி மு மு | 234 |

**தேர்தல் தொகுதி**
**அநுராதபுரம் கிழக்கு**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | -62,048 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | -48,238 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1878 |
| பொ ஐ மு | 25,277 |
| ஐ தே க | 19,949 |
| சி மு மு | 849 |

**மாவட்டம்: காலி**
**தேர்தல் தொகுதி:**
**பலப்பிட்டிய**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்: | 43,988 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்: | 33,058 |
| நிராகரிக்கப்பட்டவை: | 1,380 |
| பொ ஐ மு | 16,907 |
| ஐ தே க | 14 239 |
| சி மு மு | 421 |

**மாவட்டம் பதுளை**
**தேர்தல் தொகுதி**
**வியலுவ**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 36,342 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 30,185 |
| நிராகரிக்கப்பட்டவை | 2744 |
| ஐ-தே-க- | 14,340 |
| பொ-ஐ-மு- | 12,646 |
| சி-மு-மு- | 195 |

**தேர்தல் தொகுதி வெலிமடை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 53,643 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 43,869 |
| நிராகரிக்கப்பட்டவை | 3300 |
| ஐ-தே-க | 19,935 |
| பொ-ஐ-மு- | 18.811 |

**தேர்தல்தொகுதி: பதுளை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்; | 40,039 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்: | 30,898 |
| நிராகரிக்கப்பட்டவை | 1937 |
| ஐ தே க | 14 147 |
| பொ ஐ மு | 14,070 |
| சி மு மு | 340 |

**மாவடடம்-மாத்தளை**
**தேர்தல் தொகுதி**
**தம்புள்ளை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்- | 85,870 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 69,832 |
| நிராகரிக்கப்பட்டவை | 3,881 |
| பொ-ஐ-மு- | 34,286 |
| ஐ தே-க- | 30,468 |
| சி-மு--மு | 600 |

**மாவட்டம கேகாலை**
**தேர்தல் தொகுதி**

னும், காலஞ்சென்ற சொக்கலிங்கம், காலஞ்சென்ற செல்வரத்தினம் தம்பதிகளின் பேரனும் சிவதாஸ் (ஆசிரியர்), (1987-88 விஞ்ஞானபீட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்) யோகச்சந்திரன், கிருஷ்ண தாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் பருத்தித்துறையில் 16. 08 1994 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போதைய முகவரி:-
புற்றாளை,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்,
தாய், சகோதரர்கள்

(9116)


# 15.08.1994-ம் திகதி கடந்து விட்டதே என கவலை கொள்ளாதீர்கள்!

**எம் அன்பார்ந்த மாணவர்களே!!**
**உங்களுக்காகவே..... உங்கள் வசதி கருதி 22-08-1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது!**

**" தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள் "**

வினாவிடைப் போட்டியில் பங்கு கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி மாணவர்களின் வசதி கருதி 22 - 08 - 1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**உட்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
**இல: 10, செம்பியன் லேன்,**
**கொக்குவில்.**

தமிழீழத்தை தெரிந்து கொண்டு நீடித்த கால எல்லையினுள் நீங்களும் பிரவேசித்து தெரிந்ததை எழுதி அறிவுடன் கூடவே ஒரு பவுண் தங்கப்பதக்கத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.

(சி-10121)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ளத்தில் துடித்துக்கொண்டிருந்தான். அவருக்கு கொஞ்சம் தள்ளி அவரது தாயாரும் அண்ணனும்உடல்சிதறியநிலையில்

அரசாங்க அதிபர் அரசமற்றும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். அரசாங்க அதிபர் அவசர வானொலிச் செய்தி

சில நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் எறிகணைத் தாக்குதல்களினால் பலர் கொல்லப்பட்டமையும்மேலும் பலர் காயமடைந்துள்ளமையும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# தேர்தல் வன்முறையில் குறைந்தது ஐவர் பலியாகினர்

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பு நேரத்தில் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஐவர் மரணமடைந்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் படையின் தேர்தல் கண்காணிப்பு பிரிவின் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலிலேயே இவர்கள் பலியாகினர். இவர்களுடன் தேர்தல் கால வன்முறைகளில் பலியானோர் தொகை 25 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு நகரம் உட்பட பல்வேறு நகரங்களிலும் நேற்று இனம் புரியாத அமைதி காணப்பட்டதாக பி.பி.சியின் விசேட செய்தியாளர் ஆனந்தி தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிடுகையில், வாக்குப் பதிவு நாளான நேற்று கொழும்பு நகரில் கூட வீதிகளில் ஆட்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிப் போய் கிடந்தன வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி கொட்டாஞ்சேனை போன்ற பகுதிகளில் கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன புறக்கோட்டையிலும் நண்பகலிலேயே கடைகள் மூடப்பட்டுவிட்டன வன்செயல்கள் எதுவும் நிகழலாம் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் முன்னெச்சரிக்கையாகவே நடந்து கொண்டதை இது உணர்த்துகிறது

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு எங்கும் இராணுவத்தினர் பரவலாகக் காணப்பட்டனர் சந்திக்கு சந்தி வாகனங்களையும் ஆட்களையும் நிறுத்தி விசாரிப்பதிலும் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்த


(5-ம் பக்கம் பார்க்க)


## மரண அறிவித்தல்
### பொன்னம்பலம் கந்தசாமி

கோப்பாய் வடக்கு பூதர்மடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் கந்தசாமி அவர்கள் 16-8-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சயம்புநாதன், காலஞ்சென்ற பொன்னம்மா, தெய்வநாயகி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கனகாம்பிகை, பிரபாகரன் (சுவிஸ்), கருணாகரன், மீனாம்பிகை, கிருபாகரன், ஸ்ரீதரன், லலிதாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காசிலிங்கம், ரோகினி (சுவிஸ்), லவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நடேசலிங்கம், நரேஷ், சுரேஷ், மகேசன், திருகரன், குமணன், பிரதீப்பா (சுவிஸ்), கிரிஜா, (சுவிஸ்), கிரிசாந்த் (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 17-08-94 பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோப்பாய் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்,

மகேந்திரா வீதி,
பூதர்மடம், கோப்பாய்,

(9129)


படித்துவிட்டீர்களா?

**மாற்றம்**

சஞ்சிகை: 07

(9128)


| | |
|---|---|
| மொத்த வாக்குகள்: | 55,740 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்: | 43,724 |
| நிராகரிக்கப்பட்டவை: | 1,610 |
| ஐ தே க | 21,005 |
| பொ ஐ மு | 20,318 |
| ம ஐ மு | 474 |

**தேர்தல் தொகுதி : ஹேவாஹெட்ட**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் - | 5, 376 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் - | 40, 345 |
| நிராகரிக்கப்பட்டவை - | 2611 |
| ஐ-தே-க- | 22141 |
| பொ-ஐ-மு | 15365 |
| ம-ஐ-மு- | 107 |

**தேர்தல் தொகுதி கலகெதர**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் - | 43,462 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்- - | 35, 023 |
| நிராகரிக்கப்பட்டவை- | 1,648 |
| ஐ தே க | 18, 240 |
| பொ ஐ மு | 14, 762 |
| ம ஐ மு | 205 |

**தேர்தல் தொகுதி மகாநுவர**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள்: | 32,335 |
| அளிக்கப்பட்ட வாக்குகள்; | 25,286 |
| நிராகரிக்கப்பட்டவை; | 843 |
| ஐ தே க | 13,342 |
| பொ ஐ மு | 10,591 |
| ம ஐ மு | 355 |

**மாவட்டம கேகாலை தேர்தல் தொகுதி மாவனல்லை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 63,001 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 50,197 |
| நிராகரிக்கப்பட்டவை | 2010 |
| ஐ-தே-க- | 25,921 |
| பொ-ஐ-மு- | 21814 |

**தேர்தல் தொகுதி அரநாயக்க**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 42,338 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 34,485 |
| நிராகரிக்கப்பட்டவை | 1406 |
| ஐ-தே-க- | 17,392 |
| பொ-ஐ-மு- | 15,383 |
| சி-மு-மு- | 304 |

**தேர்தல் தொகுதி றம்புக்கணை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் - | 49,996 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் - | 39,351 |
| நிராகரிக்கப்பட்டவை - | 1560 |
| பொ ஐ மு | 19346 |
| ஐ தே க | 17,769 |
| சி மு மு | 469 |

**தேர்தல் தொகுதி யட்டியாந்தோட்டை**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 57,329 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 46,291 |
| நிராகரிக்கப்பட்டவை | 2604 |
| ஐ தே க | 24,145 |
| பொ ஐ மு | 19,340 |
| சி மு மு | 202 |

## தபால்மூல வாக்களிப்பு தேர்தல் முடிவுகள்

**மாவட்டம் மொனறாகலை**

| | |
|---|---|
| பொ ஐ மு | 1961 |
| ஐ தே க | 1487 |
| சுயேட்சை-4 | 53 |

**மாவட்டம் : வன்னி**

| | |
|---|---|
| பொ ஐ மு | - 165 |
| த வி கூ | - 148 |
| ஐ தே க | - 117 |

**மாவட்டம்- கண்டி:**

| | |
|---|---|
| பொ, ஐ. மு | - 9193 |
| ஐ, தே,க | - 7345 |
| ம, ஐ. மு | - 187 |

**மாவட்டம் - மாத்தறை:-**

| | |
|---|---|
| பொ. ஐ. மு | - 4973 |
| ஐ. தே, க | - 2155 |
| சி, மு, மு | - 169 |

**மாவட்டம்- பொலநறுவை**

| | |
|---|---|
| பொ. ஐ. மு. | - 2110 |
| ஐ. தே க | - 1504 |
| சி. மு. மு. | - 65 |